# භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
## Department of Treasury Operations

තැ.පෙ.1559, මහා භාණ්ඩාගාරය, මුදල් අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Colombo 01, Sri Lanka

| | | | |
|---|---|---|---|
| කාර්යාලය / அலுவலகம் / Office | දුරකථන / தொலைபேசி / Telephone: +94 11 2484600, +94 11 2484700 | ෆැක්ස් / பெக்ஸ் / Fax: +94 11 2484970, +94 11 2320042 | වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk |


| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No.: TOD/REV/M2/01(i) | ඔබේ අංකය / உமது இல / Your Number: | දිනය / திகதி / Date: 12.05.2021 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் அனைவருக்கும்.

**<u>2022 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடு</u>**

அரச வருமானங்களை மதிப்பீடு செய்தல், சேகரித்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் பற்றிய வழிகாட்டல்களை உள்ளடக்கி அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம் 01/2015 மற்றும் 20.07.2015 ஆம் திகதிய சுற்றறிக்கை மற்றும் அதற்கான திருத்தங்கள் உள்ளிட்ட 30.12.2016 ஆம் திகதிய அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015(V) மற்றும் 2020.08.28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் : 01/2020 மற்றும் அதற்காக இந்தத் திணைக்களத்தினால் 2020.10.14 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பக்கம் தங்களது மேலான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. திறைசேரி செயற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அவர்கள் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் பந்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் வருமான குறியீடுகள் மூலம் வருமானத்தை சேகரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள்/ கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் ஒவ்வொரு வருமான குறியீட்டு இலக்கத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டிற்குள் சேகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வருமானம் தொடர்பிலான மதிப்பீடுகளை நி.பி 85 (1), (2) இற்கு அமைய இயலுமானவரை யதார்த்தமானதாகவும், துல்லியமாகவும் தயாரித்து திறைசேரி செயற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு சமர்பித்தல் வேண்டும்.

03. அதன் பிரகாரம், பின்வரும் வருமானக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டிற்கான வருமானம் பற்றிய மதிப்பீடுகளை இத்துடன் இணைத்துள்ள படிவ இலக்கம் TOD/REV/03 இற்கேற்ப தயாரித்து 18.06.2021 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இத்திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறச் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். fernando.wjn@tod.treasury.gov.lk/piratheepan.k@tod.treasury.gov.lk

| குறியீட்டு இல | விபரம் |
|---|---|
| 20.02.01.99 | அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருமானங்கள் வாடகை - ஏனைய வாடகைகள் |
| 20.02.02.99 | வட்டி - ஏனையவை |
| 20.03.01.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - திணைக்கள விற்பனைகள் |
| 20.03.02.99 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - நிருவாக கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள் – நானாவித |
| 20.03.03.02 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - தண்டப்பணம் மற்றும் அரசவுடமையாக்கள் - ஏனையவை |
| 20.03.99.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - ஏனைய பெறுகைகள் |
| 20.05.99.00 | நடைமுறை மாற்றல்கள் - தேசிய லொத்தர் சபையும் ஏனைய மாற்றல்களும் |

4.இத் தொடர்பாக உங்களுக்கு மேலதிக விளக்கம தேவைப்பட்டால் தயவு செய்து இந்த திணைக்களத்தின் பணிப்பாளர் (வருமானம்) தொலைபேசி எண் 0112484749 ஐ தொடர்பு கொள்ளவும்.

ஒப்பம்/ எச்.சீ.டீ.எல். சில்வா
பணிப்பாளர் நாயகம்
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

பிரதிகள் : 01. கணக்காய்வாளர் நாயகம்
02. பணிப்பாளர் நாயகம் - அரசிறைக் கொள்கை திணைக்களம்

( படிவ இல: TOD/REV/03 )

# 2022 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடுகள

(i) சட்டம் / அதிகாரம் :- (தொடர்புடைய சட்டவாக்கங்கள் அல்லது சுற்றுநிருப அறிவுறுத்தல்கள்)

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் அல்லது நிறுவனங்கள்) தலைப்பு இல :-

(iii) வருமான வகை :-

(iv) வருமானப் குறியீட்டு இலக்கம் :-

| விபரம் | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் 2021 | | | 2022 ஆம் ஆண்டற்காக மதிப்பீட்டு வருமானம் | திட்ட ஏற்பாடு | | நிரல் 3 இற்கும் 4 இற்கும் இடையிலான மாற்றத்திற் கான காரணம | நிரல் 4 இற்கும் 6 இற்கும் இடையிலான வேறுபாடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2020 | அடிப்படை மதிப்பீடு | திருத்தப்பட்ட மதிப்பீடு | 2021.05.31 அன்று வரையான உண்மை வருமானம் | | 2023 | 2024 | | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | | | | | | | | |

(நிரல் இல. 9 மற்றும் 10 ஆகியவற்றை தகுதியான காரணங்களுடன் பூர்த்திசெய்வது கட்டாயமானதாகும். )

சரியானதென உறுதிப்படுத்துகிறேன்

.....................................................................

செயலாளர் / திணைக்களத் தலைவர் /மாவட்டச் செயலாளர்

(பதவி முத்திரை)

திகதி :-